பக்கங்கள் 18 + 10

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 01 சனிக்கிழமை 17.8.2024 | அதிர்வு 15

## ஜனாதிபதித் தேர்தல் மீறல்கள்: இதுவரை 513 முறைப்பாடுகள்




ஜனாதிபதித் தேர்தல் மீறல்கள் தொடர்பில் இதுவரை ஜூலை மாதம் 02▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழர்களின் நிலைப்பாடு என்ன?

## தமிழரசின் எம்.பிக்களிடம் வினவிய இந்தியத் தூதுவர்



வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் நிலைப்பாடு என்னவென்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வினவினார் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோருக்கும், இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே இந்தியத் தூதுவர் மேற்படி கேள்வியைத் தொடுத்தார். 02▶

# நல்லூர் கந்தனைத் தரித்த திலித் ஜயவீர







(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் வந்துள்ள சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர இன்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது, சர்வஜன அதிகாரத்தின் கட்சித் தலைவர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, கெவிந்து 02▶

# வாசு ‘குட்பாய்’



செயற்பாட்டு அரசியலில் இருந்து விலகுவதற்கு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் முன்னாள் தலைவரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தீர்மானித்துள்ளார்.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாகவே ஜனநாயக இடதுசாரி முன்னணிக்குப் புதிய தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிரேஷன் பிரேமரத்ன அண்மையில் நியமிக்கப்பட்டார்.

தனது உடல்நிலையைக் கருத்தில்கொண்டே வாசுதேவ நாணயக்கார, அரசியலுக்கு விடை கொடுக்கும் முடிவை எடுத்துள்ளார். இதன்படி அடுத்த நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர் போட்டியிடமாட்டார்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

இலங்கையில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 34 ஆயிரத்து 906 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 248 ஆகும்.

அதன்படி, கொழும்பு மாவட்டத்திலிருந்து 8 ஆயிரத்து 452 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேலும், இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 16 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதனால், பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுச்சூழலைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்குமாறு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# தீர்வுக்கான ஆரம்பமாக 13 ஐ ஏற்கும் சஜித் அணி



வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கான அரசியல் தீர்வின் ஓர் ஆரம்பமாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கின்றது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பில் உள்ள விடயமாகும். அது முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே எமது கட்சி உள்ளது. 2019 ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் குறித்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பில் பல கருத்துகள் உள்ளன. அப்பகுதிகளில் உள்ள கட்சிகளுக்கிடையில்கூட கருத்து முரண்பாடுகள் உள்ளன. எனவே, அது தொடர்பில் நாம் முடிவெடுக்கவில்லை. வடக்கு, கிழக்கு தற்போது தனித் தனி மாகாணங்களாகவே உள்ளன. இந்நிலையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வாகவே 13 இருக்கின்றது. வடக்கில் உள்ள தமிழ்க் கட்சிகளும் 13 ஐ ஆரம்ப தீர்வாக ஏற்றுள்ளன.” – என்றார்.

## ஜனாதிபதித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

அத்துடன் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பிலும், அது குறித்து தமிழ் மக்களின் நிலைப்பாடு பற்றியும் இந்தியத் தூதுவர் வினவினார்.

இதன்போது தாம் பொதுவான கருத்துக்களைத் தெரிவித்தோம் என்று சந்திப்பில் கலந்துகொண்ட தமிழரசுக் கட்சியின் எம்.பிக்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தென்னிலங்கை பிரதான வேட்பாளர்களின் தமிழ் மக்கள் தொடர்பான உறுதிமொழிகள் குறித்தும் தம்மிடம் இந்தியத் தூதுவர் கேட்டறிந்தார் என்றும் மேற்படி சந்திப்பில் கலந்துகொண்ட தமிழரசுக் கட்சியின் எம்.பிக்கள் குறிப்பிட்டனர்.

## நல்லூர் கந்தனைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குமாரதுங்க, அனுராத ஜகம்பத் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

மௌபிம ஜனதா கட்சியின் தலைவரான திலித் ஜயவீர ஜனாதிபதித் தேர்தலில் நட்சத்திர சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

குறித்த கட்சியின் அங்குரார்ப்பண முதலாவது பொதுக் கூட்டம் இன்று மதியம் ஜனாதிபதி வேட்பாளர் தொழிலதிபர் திலித் ஜயவீர தலைமையில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியுள்ளது.

## ஜனாதிபதித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

31 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி வரை 519 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 306 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 197 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும், ஏனைய விடயங்கள் தொடர்பில் 15 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.





# யாழில் சர்வமதத் தலைவர்களை சந்தித்துப் பேசிய திலித் ஜயவீர

(எஸ்.நிதர்ஷன்)

சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர இன்று யாழ்ப்பாணத்தில் சர்வமதத் தலைவர்களைக் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ். ஆரியகுளம் நாகவிகாரை, யாழ்ப்பாணம் ஆயர் இல்லம், ஐந்து சந்தி ஜும்மா பள்ளிவாசல் மற்றும் நல்லை ஆதீனத்துக்கும் திலித் ஜயவீர சென்றார்.

இதன்போது, சர்வஜன அதிகாரத்தின் கட்சித் தலைவர்களான விமல்வீரவன்ஸ, உதய கம்மன்பில, கெவிந்து குமாரதுங்க, அனுராத ஜகம்பத் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



















# பேராயரைச் சந்தித்த அநுரகுமார

கொழும்பு பேராயர் இல்லத்தில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை இன்று சனிக்கிழமை நண்பகல் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க சந்தித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை, அரசியல் நிலவரம் தொடர்பில் அருட்தந்தையர்களுடன் கலந்துரையாடிய அநுரகுமார திஸாநாயக்க, அவர்களிடம் ஆசியையும் பெற்றுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத் எம்.பியும் இணைந்துகொண்டார்.







# கடை உரிமையாளர் தாக்கியதில் ஊழியர் ஒருவர் உயிரிழந்தார்!

கடை உரிமையாளருக்கும் ஊழியருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாகக் கடை உரிமையாளர் தாக்கியத்தில் ஊழியர் உயிரிழந்துள்ளார் என்று வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு 13, ஜம்பட்டா தெருவில் வசிக்கும் 46 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் கடையின் உரிமையாளரான 42 வயதுடையவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இவரா மீட்பர்?

தமது பக்கம் ஆதரவு தெரிவித்து, தம்முடன் அணி சேரும் எம்.பிக்களுக்கு அவர்கள் முன்மொழியும் பரிந்துரைப்படி பல கோடிக் கணக்கான ரூபா நிதி த்திட்டங்களை அங்கீகரித்து நிதி ஒதுக்குவதும் -

தமது பக்கத்துக்கு மாறான தரப்புக்கு அந்த எம்.பிக்கள் ஆதரவு தெரிவித்ததும், அந்த எம்.பிக்களின் முன்மொழிவுடன் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கான நிதியை உடனடியாக வெட்டி நிறுத்துவதும் -

ஒரு வகையில் லஞ்ச, ஊழல் மோசடி வகைக்குள் அடங்குபவைதான்.

அரசியல் நிலைப்பாட்டுக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதும் -

அதேபோல, அதே நோக்கக் காரணங்களுக்காக நிதி ஒதுக்கீடுகளை வெட்டுவதும் -

ஊழல் மோசடிதான். லஞ்ச லாவண்யம் தான். அரசியல் நோக்கத்திற்காக அரச நிதியை லஞ்சம் போல - கையூட்டு மாதிரி - பயன்படுத்தும் மோசடிதான்.

அது மாத்திரமில்லாமல், நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத தமது கட்சிப் பிரமுகர்களின் பரிந்துரைகளுக்கு அமைய, அவர்களின் பெயர்களில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளின் கீழ் மாவட்ட ரீதியாக நிதியை ஒதுக்குவதும்இதேவகையைச்சேர்ந்ததுதான்.

அவற்றை வெளிப்படையாகவும், திமிராகவும், சர்வாதிகாரித் தனத்துடனும் முன்னெடுக்கின்றார் நாட்டின் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க.

இப்படி அரச நிதி ஒதுக்கீடுகளை நேரடியாக வாக்குத் திரட்டுவதற்கான ஒரு காரணியாகப் பயன்படுத்துவது வாக்குக்கு லஞ்சம் கேட்கும் அப்பட்டமான மோசடிதான்.

ரிஷாட் பதியுதீன் எம்.பியும் அவர் கட்சியும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் தம்மை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதற்காக அத்தரப்பு சமர்ப்பித்த நிதி திட்டங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் பல கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டு அங்கீகாரங்களை வழங்கினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அவரது கட்சி தன்னை ஆதரிக்காமல், எதிர்க்கட்சி தலைவரான சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்ததும், அந்த நிதித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் உடனடியாக வெட்டப்படுகின்றன என அறிவிப்பு வந்திருக்கின்றது.

இது, அரச நிதியை தேர்தல் ஆதரவு பெறுவதற்காக - செல்வாக்குக்காக - லஞ்சமாக பயன்படுத்தும் மோசடி என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரியும் விடயமாகும்.

மதுபானசாலை உரிமங்கள் வழங்கும் விவகாரமும் கூட இத்தகைய அடிப்படையில்தான் தாராளமாக நடக்கின்றது.

இதே ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த நல்லாட்சி அரசில்தான் பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான பிணை முறி ஊழல் இடம் பெற்றது.

இப்போது இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு விஸா வழங்கும் நடைமுறையை ஏற்படுத்தும் விவகாரத்தில் பல பில்லியன் ரூபா சுளையாகச் சுருட்டும் சுத்துமாத்து அம்பலமாகி, நீதிமன்றத்தினால் தடை விதிக்கப்பட்டு, கட்டுப்படுத்தும் நிலைமை வந்திருக்கின்றது.

இவை யாவும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சி தர்பாரின் ஊழல், மோசடிகளை உறுதியாக அம்பலப்படுத்தும் சில சாட்சியங்கள்தாம். ஆதாரங்கள்தாம்.

பெரும் பொருளாதார வீழ்ச்சிக்குள்ளும், நெருக்கடிக்குள்ளும் சிக்கி கிடக்கும் நாட்டை மீட்டெடுப்பதாயின் அதற்கு முதலில் ஊழல், மோசடி, அரச நிதித் துஷ்பிரயோகம், லஞ்ச லாவண்யம் போன்ற இழிசெயல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பது அடிப்படையானது.

நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து காத்து மீட்க வந்த இரட்சகர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று அவர் தரப்பினர் பகீரதப் பிரயத்தனத்துடன் கோயபலஸ் பாணி பிரசாரம் செய்கின்றனர்.

ஆனால், ஊழல், மோசடி, அரச நிதித் துஷ்பிரயோகம் போன்ற சிறுமைத் தனம் மிக்க, மிக மோசமான, குளறுபடி நிர்வாகத்தைத்தான் அவர் முன்னெடுத்து வருகின்றார் என்பது அவரது நடவடிக்கை மற்றும் செயற்பாடுகளால் தினசரி அம்பலமாகி வருகின்றது. அதுதான் யதார்த்தப் புறவுண்மை.



# தொழு நோய் தொடர்பில் வவுனியாவில் விழிப்புணர்வு

(கே.வசந்தன்)

வவுனியாவில் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலகமும் காவேரி கலாமன்றமும் இணைந்து இந்த செயற்றிட்டத்தை நேற்று (16) பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் முன்னெடுத்திருந்தன.

இலங்கையில் தொழுநோய் தொற்று ஏற்பட்டுவரும் மாவட்டங்களில் வவுனியாவும் முன்னனியில் உள்ளது. இதனால் இதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகத் தொழுநோயை இனங்காணல், சிகிச்சை அளிக்கும் முறை மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி எஸ்.சுபாஸ்கரன், தோல் நோய் சிகிச்சைப் பிரிவு வைத்தியர் எம்.சுதன், இயன்மருத்துவப் பிரிவு வைத்தியர் ரி.கேதீஸ்வரன், முன்னாள் பொது சுகாதார பரிசோதகர் ரி.தியாகலிங்கம் ஆகியோர் விழிப்புணர்வு செயற்றிட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.











# கமநல சேவைகளுக்கு விருதுகள்

(ஹஸ்பர்)

கடந்த வருடம் முழுவதும் சிறப்பாக தமது செயற்றிறன்களை வெளிப்படுத்திய ஏ, பி, சி தரக் கமநல சேவை நிலையங்களுள் ஒவ்வொரு பிரிவுக்குமான மாவட்ட மட்ட, மாகாண மட்ட மற்றும் தேசிய மட்ட போட்டிகள் இடம்பெற்றன.

சி தரப் பிரிவைச் சேர்ந்த கமநல சேவை நிலையங்களுக்கு இடையேயான போட்டியில் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் து.தர்சானந்தன் தலைமையிலான உப்புவெளி கமநல சேவை நிலையமானது மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் மட்டுமின்றி தேசிய மட்டத்திலும் முதல் இடத்தை பெற்றுள்ளது.








# மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய விஞ்ஞான வினா விடைப் பரீட்சை!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் விஞ்ஞான வினா விடைப் போட்டியின் முதல் கட்ட எழுத்து மூலப் பரீட்சை கன்னன்குடா மகா வித்தியாலயத்தில் மண்முனை மேற்குக் கல்வி அலுவலகத்தின் மேற்பார்வையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அருள் -ஸ்ரீ அறக்கட்டளையால் 2024 ஆம் ஆண்டில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக புலைமைப்பரிசில் திட்டம் ஒன்றை முன்னெடுத்து தரம் 10 மற்றும் 11 மாணவர்களுக்கான இந்த வினா விடைப் போட்டி நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலுள்ள 32 பாடசாலைகளில் இருந்து 128 மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர். இவர்களில் முதல் ஐந்து இடத்தை பெறும் பாடசாலைகள் அடுத்த கட்ட வினா விடை போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

அந்த வகையில் இடம்பெற்ற வினா விடைப் போட்டியில் முதலாவது இடத்தை அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயமும் இரண்டாவது இடத்தை முதலைக்குடா மகா வித்தியாலயமும் மூன்றாவது இடத்தை கொத்தியாபுலை கலைவாணி வித்தியாலயமும் நான்காவது இடத்தை கொக்கட்டிச்சோலை இராம கிருஸ்ணமிசன் மகா வித்தியாலயமும் ஐந்தாவது இடத்தை அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயமும் பெற்றுக் கொண்டு இரண்டாம் கட்ட வினா விடைப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் வெற்றி பெறும் முதல் 20 மாணவர்களுக்கு அவர்களது கற்றல் செயற்பாடுகளுக்கான நிதியுதவி அருள் - ஸ்ரீஅறக் கட்டளையால் வழங்கி வைக் கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# அட்டாளைச்சேனையில் வலுவிழந்தோருக்கு சக்கர நாற்காலி மற்றும் ஊன்றுகோல்கள்

(எம். எப். நவாஸ் )

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், தைக்கா நகர் போன்ற கிராமங்களில் வலது குறைந்த மற்றும் தீவிர நோய்வாய்க்கு உட்பட்டவர்களுக்கான சக்கர நாற்காலி மற்றும் ஊன்றுகோல் என்பன பிரதேச செயலகத்தில் வைத்து எம்.ஏ.ஏ. நிறுவனத்தின் அனுசரணையில் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வானது அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர் எம். எஸ். ஜௌபர் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் பிரதம அதியாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரீ.எம். இர்பான் மற்றும் அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹ்ஹீஜா முஷாபிர்,அந்த நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஏ. எல். எம். தாபீத், மாவட்ட இணைப்பாளர் எப். எம். அம்ஜத் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர்களான ரீ.எம். நசீர், எம் நுஸ்லி, முகம்மது ஆதில் மற்றும் எம்.இம்ரான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சக்கர நாற்காலி- 30, ஊன்றுகோல்- 150 என்பன நிகழ்வின் போது வழங்கி வைக்கப்பட்டன.

# திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் 43 ஆயிரம் ஏக்கர் காணிகள் அபகரிப்பு

## திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் சுட்டிக்காட்டு

(ஹஸ்பர்)

திருகோமமலை மாவட்டத்தில் மட்டும் மொத்தமாக 43 ஆயிரம் ஏக்கர் விவசாய காணிகள் எல்லையிடப்பட்டு அபகரிப்பு செய்யப்பட்டுள்ளன.

இதனை ஜனாதிபதியிடம் பேசிய போது உரிய அமைச்சர்களுடன் கதைத்துத் தீர்வைப் பெற்றுத் தருவார் என்று தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலை,புல்மோட்டை பகுதியில் தமிழ் முஸ்லிம் மக்களுடனான சந்திப்பொன்று நேற்று (16) இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

குச்சவெளி பிரதேச செயலக பகுதியில் 10 ஆயிரத்து 435 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான விவசாய நிலங்களுக்கான குளங்கள் வாய்க்கால்கள் காணப்படுகிறன. இது தொடர்பில் ஆட்சியாளர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து உரிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்காக முயற்சிக்கிறோம்.

இதேவேளை 500 ஆசிரியர் வெற்றிடங்களும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் 100 சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்களும் நிலவுகின்றன. இதனால் சத்திர சிகிச்சைகள் தள்ளிப்போடப்படுகின்றன. வெளிநாடுகளில் வைத்தியர்கள் இல்லாமல் அறுவைச்



சிகிச்சை இடம் பெறுகின்ற போதும் இங்கு சிற்றூழியர்கள் உதவிக்காக இன்மையால் பிற்போடப்படுகிறது.

கல்வி, சுகாதாரம், சமூக மேம்பாடு உள்ளிட்ட விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டுக் கட்சி வேறுபாடுகளின்றி ஒன்றிணைந்து செயற்படுவோம் .

1976 இன் பின் கட்டுகுளப் பகுதிக்கு முதல் நாடாளுமன்ற பிரதிநிதி நானே. புல்மேடு, திரியாய், குச்சவெளி என்ற பிரதேச பாகுபாடின்றி அனைத்து சேவைகளையும் சரிவரச் செய்வேன். இதற்கான ஒத்துழைப்புக்களை மக்கள் வழங்க வேண்டும்.- என்றார்.

சந்திப்பில் குச்சவெளி பிரதேச சபை முன்னால் தவிசாளர் முபாரக் உட்பட பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







## சீன் லோவர் பூண்டுலோயா தோட்டத்தில்

# திடீரெனப் பரவிய தீயால் 25 வீடுகள் நாசமகின!

(ஆ.ரமேஸ்)

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சீன் பழைய தோட்டம் என்றழைக்கப்படும் சீன் லோவர் பூண்டுலோயா தோட்டத்தில் (16) நேற்றிரவு 08 மணியலவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 28 வீடுகளை கொண்ட இலக்கம் (01) தொடர் குடியிருப்பு லயத்தில் 25 வீடுகள் எரிந்து நாசமகின.

இந்தப் பகுதிக்குப் பொறுப்பான கிராம அபிவிருத்தி அதிகாரியின் அறிக்கையின்படி பூண்டுலோயா பொலிஸார் இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.

இந்தத் திடீர் தீ விபத்துச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 25 வீடுகளைச் சேர்ந்த 86 பேர் நிர்கதிக்குள்ளான நிலையில் அவர்கள் அத் தோட்ட ஆலய மண்டபம் மற்றும் உறவினர்களின் வீகளில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரத்தில் இந்த திடீர் தீ பிடிப்பு சம்பவத்தால் அதிர்ச்சிக்கு உள்ளான இரு வயோதிபர்கள் கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த சம்பவத்தில் வீடுகளை இழந்துள்ள மூன்று கர்பிணி தாய்மார்கள் உறவினர்களின் வீடுகளில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தீ சம்பவத்துக்காக காரணம் மற்றும் சேத விவரங்களை கண்டறிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவித்தனர்.

அதேநேரம் இந்தத் தீ இடம்பெற்ற சிறிது நேரத்தில் சீன் தோட்டத்திற்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இளைஞர்கள் போராடியுள்ள போதிலும் பயனளிக்கவில்லை எனவும் நுவரெலியா மாநகரசபை தீயணைப்பு பிரிவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் அவர்கள் உரிய நேரத்தில் சம்பவ இடத்துக்குச் வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் இந்த தீ சம்பவத்தை உணர்ந்த குடியிருப்பாளர்கள் முடிந்தவரை போராடித் தமது உடமைகளைக் காப்பாற்றியும் உள்ளனர். பலர் தமது உடமைகளை இழந்துள்ளனர்.

சம்பவத்தை அறிந்த அமைச்சரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் சம்பவ இடத்துக்கு நள்ளிரவு வருகைதந்து பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிட்டதுடன் உடடிக் தேவைகளுக்கான வசதிகளும், நிதி உதவியும் செய்தார் என்று தோட்ட மக்கள் தெரிவித்தனர்.













# புலிகள் காலத்துத் தங்கத்தைத் தேடி புதுக்குடியிருப்பில் அகழ்வுப் பணிகள்!

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மந்துவில் பகுதியிலுள்ள தனியார் காணியில் விடுதலைப் புலிகள் யுத்த காலத்தில் ஆயுதங்கள் மற்றும் தங்கங்களை மறைத்து வைத்திருந்தனர் என்று சந்தேகித்து அகழ்வு பணிகள் இடம்பெற்றுள்ளன.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் உத்தரவின் பேரில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் மேற்பார்வையில் அகழ்வு பணிகள் நேற்று இடம்பெற்றன.

பல மணிநேரம் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட போதும் முடிவில் எதுவும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் தோண்டப்பட்ட இடங்கள் மீண்டும் மூடப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

# மழையுடனான காலநிலையால் மண்சரிவு அபாய எச்சரிக்கை!

நிலவும் அதிக மழையுடனான வானிலை காரணமாக காலி, களுத்துறை மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, காலி மாவட்டத்தின் நெலுவ, எல்பிட்டிய, நாகொட, யக்கலமுல்ல பிரதேசங்களுக்கும், களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை, மதுகம மற்றும் மாத்தறை மாவட்டத்தின் பிடபெத்தர ஆகிய இடங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை அறிவிப்பு நேற்று இரவு 7.30 மணி முதல் விடுக்கப்பட்டுள் ளது என தேசிய கட்டிட மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.



# விலத்தவ பகுதியில் பெண் கொலை; சந்தேக நபரும் பொலிஸாரால் கைது!



சிலாபம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விலத்தவ பகுதியில் பெண் ஒருவர் நேற்று (16) கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று சிலாபம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் உயிரிழந்தவர் பிங்கிரிய, மூகலன்ஹேன பிரதேசத்தை சேர்ந்த 65 வயதுடையவர் என்று தெரியவந்துள்ளது.

கொலை செய்யப்பட்ட பெண் விலத்தவ வீதியின் ஓரத்தில் சடலமாக கிடந்தார் என்று அவரது மகள் வாக்குமூலம் அளித்துள்ளார்.

மேலும், மகளின் கணவர் உயிரிழந்த பெண்ணை தேடிச் சென்ற போது நபர் ஒருவர் பெண் ஒருவரை தூக்கிச் செல்வதை பார்த்துள்ளார். மோட்டார் சைக்களில் வெளிச்சத்தில் குறித்த நபரை இனங்கண்டார் என்றும் வாக்குமூலம் அளித்துள்ளார்.

அதன்படி செயற்பட்ட பொலிஸார் நேற்று இந்தக் குற்றத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைது செய்து சிலாபம் பொலிஸில் ஆஜர்படுத்தினர்.

சந்தேக நபர் வீரபொகுன பிங்கிரிய பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# அம்பாறையில் பெருமளவிலான ஐஸ் போதைப் பொருள்கள் மீட்பு!





(பாறுக் ஷிஹான்)

30 லட்சம் ரூபா பெறுமதி மிக்க ஐஸ் போதைப் பொருள்களுடன் இரண்டு சந்தேக நபர்களைக் கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படையின் புலனாய்வு பிரிவின் தகவலுக்கமைய நீண்ட நாள்களாக ஐஸ் போதைப் பொருள்களை விநியோகம் செய்து வந்த சந்தேக நபர்கள் கல்முனை மாநகரில் உள்ள உல்லாச விடுதி ஒன்றில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பகுதியில் இருந்து கல்முனைக்கு நீண்ட காலமாக இந்தப் போதைப் பொருள்கள் கடத்தி வரப்பட்டுள்ளது என்றும் 36 வயது மற்றும் 49 வயது மதிக்கத்தக்க கல்முனை அனுராதபுரம் பகுதியை சேர்ந்த சந்தேக நபர்கள் ஆடம்பர உல்லாச விடுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்றும் விசேட அதிரடிப்படையின் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

போதைப் பொருட்கள் பொலித்தீன் பைகளில் உறையிடப்பட்டு மிக சூட்சுமமாகக் கடத்தி வரப்பட்டுள்ள நிலையில் கல்முனை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் கல்முனைத் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர்கள், சான்றுப் பொருள்களுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி, பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.பி. குணசிறியின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர்களான சம்பத் குமார, அசித ரணசூரிய ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்நாயக்க தலைமையிலான அதிகாரிகள் இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

தற்போது கைதான சந்தேக நபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கல்முனை விசேட அதிரடிப் படையினர் முன்னெடுத்து வருகின்றனர். அத்துடன் அம்பாறை மாவட்ட வரலாற்றில் மீட்கப்பட்ட பெருமளவிலான ஐஸ் போதைப் பொருள்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார், சோழமண்டலகுளம் காணியை விடுவித்து உதவுக!

## ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதினார் சிவகரன்

மன்னார், சோழமண்டல குளம் காணியை விடுவித்து மக்களது இயல்பு வாழ்வுக்கு உதவுமாறு மன்னார் மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ். சிவகரன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இந்த விடயம் தொடர்பாகப் பல முறை தங்களுக்குக் கடிதம் எழுதிப் பயனற்று போய்விட்டது.

30 ஆண்டுகளாக விவசாயச் செய்கையில் ஈடுபட்டுவரும் 100 ஏழை விவசாயிகள் புறக்கணிக்கப்பட்டுப் பெரு வணிகர்களுக்கும் கொழும்பிலும், வெளிநாட்டிலும் இருப்பவர்களுக்கும் சட்ட விரோதமாகக் காணி வழங்கி உள்ளீர்கள்.

நீதியின் பரிபாலனமின்றி அநீதியாக உங்கள் அமைச்சர்கள் சலுகை பெற்றுக் கொண்டு இக்காணியை வழங்கியுள்ளார்கள் என்பதே வெளிப்படையான உண்மை. இவ்விடயம் தொடர்பில் அரச அதிபர் பலமுறை வேண்டுகோள் விடுத்துள்ளார். இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் பல தடவைகள் எழுத்து மூலமும் நேரடியாகவும் தெரிவித்துவிட்டனர்.

இதற்காக பல கூட்டங்களும் நடந்தேறிவிட்டன. ஆனால் எங்கும் நீதி கிடைக்கவில்லை. ஏழை மக்களின் வாழ்வாதாரத்துக்கான காணியை அபகரித்தது அடிப்படை உரிமை மீறலாகும். வாழ்வுரிமையின் அடிப்படை உரிமையை மறுக்கும் இந்த நாட்டின் நீதியற்ற நிர்வாக இயலின் ஜனாதிபதித் தேர்தலை முழுமையாகப் புறக்கணிக்கின்றோம்.

எந்த வேட்பாளருக்கும் நாம் வாக்களிக்க தயாராக இல்லை. எமது அடிப்படை உரிமையை பெற முடியாத இந்த நாட்டில் குடியிருந்து என்ன பயன்? இந்த நூறு குடும்பங்களின் வாழ்வுரிமையை மறுக்கும் தங்களின் அரசு இவர்களை இந்த நாட்டில் இருந்து நாடு கடத்தி விடுங்கள்.

சமநீதி, சமத்துவம், சமூகநீதி, அடிப்படை வாழ்வுரிமை இல்லாத நாட்டில் வசித்து என்ன பயன்? பணம் உள்ளவர்கள் மட்டுமே வாழலாம். அவர்களுக்கு மட்டுமே இந்த அரசு சகல விடயங்களிலும் முன்னுரிமை வழங்குகின்றது.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தீர்வு மட்டுமல்ல அடிப்படைப் பிரச்சினையும் புறக்கணிக்கும் தாங்கள் எப்படி பல்வகைமைச் சமூகத்தின் தலைவராக மிளிர்ந்து விட முடியும். இந்த நாட்டில் ஏதிலிகள் குடியிருந்து என்ன பயன்? அவர்களின் உரிமைகளை அதிகாரிகளும் ஆட்சியாளர்களும் சகல வழிகளிலும் நசுக்கி வருகிறீர்கள். எனவே உடனடியாக தேர்தலுக்கு முன்னதாகவே இந்த காணிப் பிரச்சினை தீர்க்கப்பட்டுப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

உலகுக்கு ஜனநாயகமும் சமத்துவமும் பற்றிப் புத்தி புகட்டும் தாங்கள் உள்நாட்டில் சாமானியனின் ஜனநாயகத்துக்குச் சாவு மணி அடிப்பது தான் நடுநிலையான ஆட்சியா? நல்லாட்சி என்பது பாதிக்கப்பட்டவன் பக்கம் நிற்பதே. முதலாளித்துவத்துக்கு ஆதரவான அரசு பாட்டாளி வர்க்கத்தின் விரோதியே. எனவே இப்பிரச்சினை உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். இல்லையேல் வரும் ஜனாதிபதி தேர்தலை நாம் முழுமையாக புறக்கணிப்போம்.- என்றுள்ளது.



# தேசிய மக்கள் சக்தியினர் பெண்களுடனான சந்திப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மக்கள் சக்தியின் பெண்களுடனான கலந்துரையாடல் அம்பாறை மாவட்டத்திலுள்ள கரையோரப் பிரதேசங்களில் இடம்பெற்றன.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பெண்களின் பங்களிப்பு தொடர்பான விடயங்களை அம்பாறை மாவட்டத்திலுள்ள பெண்கள் மத்தியில் கொண்டு செல்லும் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியின தேசிய செயற்குழு உறுப்பினர் தோழி சறோஜா போல் ராஜா கல்முனை தொகுதியின் சாய்ந்தமருது பிரதேசத்தில் பெண்களை சந்தித்து கலந்துரையாடினார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள கரையோரப் பிரதேசங்களான பெரிய நீலாவணை, சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று மற்றும் ஆலையடிவேம்பு அகிய பிரதேசங்களிலும் காலை முதல் மாலை வரை தொடர்ச்சியாக நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது பெண்கள் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி ரணிலுக்கு ஈடான வேறு தெரிவு எவருமில்லை!

## வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு

நாட்டை கட்டியெழுப்பக் கூடிய தலைவர் ரணிலே. அவருக்கு ஈடான அறிவு, அனுபவம், இயலுமை கொண்ட வேறு தெரிவு எவருமில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இம்முறை ஜனாதிபதி தேர்தலில், ரணில் விக்ரமசிங்க நாட்டுக்காகவே போட்டியிடுகின்றார். ஒரு கட்சி சார்ந்தோ, ஒரு குழுவினர் சார்ந்தோ அல்லாமல் சுயாதீன வேட்பாளராகவே களம் இறங்கியுள்ளார். நாட்டை கட்டியெழுப்பக் கூடிய தலைவர் ரணிலே. அவருக்கு ஈடான அறிவு, அனுபவம், இயலுமை கொண்ட வேறு தெரிவுகள் இல்லை. எனவே மக்கள் பிரதிநிதி என்ற வகையில், எனது சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் வகையில், எக்கட்சியும் சாராது சுயாதீனமாக ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்க முன்வந்தேன்.

மலையக வரலாற்றில், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான, ரணில் தலைமையிலான நல்லாட்சி காலம் சிறப்பு மிக்கது. பல சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை அக்காலப்பகுதியில் மேற்கொள்ள முடிந்தது. அந்த வகையில், மலையக மக்களின் அபிலாஷைகளை அடைந்துகொள்வதற்கு ரணிலே நம்பிக்கைக்கு உரிய தலைவராக உள்ளார். அவரோடு கைகோர்த்து பயணிப்பதே நாட்டுக்கும், நம் சமூகத்துக்கும் பயன் சேர்க்கும்.

ரணில் தலைமையிலான நல்லாட்சியில், 7 பேர்ச் நில ஒதுக்கீட்டுடன் தனி வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. மலையகத்தில் புதிய கிராமங்கள் உருவானது. மலையகத்திற்கான அதிகார சபை உருவாக்கப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி செயற்பாட்டுக்குள் மலையக தோட்டங்கள் உள்வாங்கப்பட்டன. மற்றும், நுவரெலியா மாவட்டத்தின் பிரதேச சபைகளின் அதிகரிப்பு, பிரதேச செயலகங்கள் அதிகரிப்பு முன்னெடுக்கப்பட்டது. இவை அனைத்துக்கும் மேலாகக் கிட்டிய பாடசாலை நல்ல பாடசாலை திட்டத்தில் நூற்றுக்கும் அதிகமான மலையகப் பாடசாலைகள்



அபிவிருத்தி செய்யப்பட்டன. இவற்றுக்கு அங்கீகாரம் அளித்தது ரணில் தலைமையிலான அரசு என்பதை நாம் மறந்துவிட முடியாது.

நாட்டைக் கட்டியெழுப்ப சரியான ஒரு தலைவரை அடையாளம் காட்ட வேண்டியது எமது கடமை. அதனையே நான் முன்னெடுத்திருக்கின்றேன். இது ஒரு கடினமான முயற்சி என்பது எனக்கு தெரியும். ஆனாலும் அந்தச் சவாலைச் வெல்வதன் மூலமாக மட்டுமே எதிர்காலம் ஒன்றைப் பற்றிச் சிந்தித்து பார்க்க முடியும். அதைவிடுத்து, அடுத்த தேர்தலில் நாம் எங்கே இருந்தால் வெற்றிபெற முடியும், எம்மை காப்பாற்றிக்கொள்ள முடியும் என்ற குறுகிய எண்ணப்பாட்டுடன் முடிவுகளை எடுத்தால், இரண்டு ஆண்டுகளுக்கு முன் சந்தித்த போலின் யுகத்துக்கே மறுபடியும் செல்ல வேண்டி ஏற்படும்.

தத்தமது எதிர்கால நலனை விட்டு, முழு நாட்டினதும், சமூகத்தினதும் நலனை முன்னிறுத்தும் அனைவரும், கட்சி, நிறங்களை விட்டு நாட்டுக்காக முன்னிற்கும் தலைவரை ஆதரிக்க முன்வர வேண்டும். எமது தாய் நாட்டின் முன்னிருக்கும் சவால்களை வெல்லும் தகைமையுடைய ஒரே தலைவர், ரணிலை ஆதரிப்பது மட்டுமே காலத்தின் கட்டாயமாக உள்ளது.-என்றுள்ளது.



# அரசமைப்பை காப்போம் என்ற தொனிப்பொருளில் 100 நாள் போராட்டத்தை தொடங்கியது காங்கிரஸ்

அரசமைப்புச்சட்டத்தைக்காப்போம்என்ற பெயரில் 100 நாள் போராட்டத்தை டில்லியில் காங்கிரஸ் கட்சி தொடங் கியுள்ளது.

இந்த போராட்டத்தை காங்கிரஸ் எம்.பி. அஜய் மாக்கன் டில்லியில் நேற்று தொடங்கி வைத்து கருத்து தெரிவிக்கையில்,

“சம்விதான் ரக் ஷா (அரசமைப்புச் சட்டத்தைக் காப்போம்) என்ற பெயரில் டில்லி முழுவதும் இந்த 100 நாள் போராட்டம் நடத்தப்படும். எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி வரை டில்லியின் 70 சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் இந்தப் போராட்டம் நடைபெறும். படிப்படியாக நாடு முழுவதும் போராட்டத்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும். நாடு முழுவதும் அடுத்த 100 நாள்களுக்கு இந்த போராட்டம் நடைபெறும்.

சமூகத்தின் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் முன்னேற்றத்தைத் தடுக்க சில சக்திகள் அரசமைப்பு சட்டத்தை குலைக்கும் நோக்கத்தில் உள் ளன.

அரசியலமைப்பு சட்டத்தை மாற்றுவோம் என்று பாஜக தலைவர்கள் வெளிப்படையாகவே பேசி வருகின்றனர். எனவேதான், இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

சமூகத்தின் பின்தங்கிய பிரிவினருக்கு அரசமைப்பால் வழங்கப்பட்ட அதிகாரத்தையும் சமத்துவத்தையும் பறிக்க வேண்டும் என்பதே அவர்களது விருப்பமாக உள்ளது. இது அவர்களின் கனவிலும் நடக்காது.” – என்றார்.

## பெண் மருத்துவர் கொலை:

# தொடங்கியது நாடு தழுவிய மருத்துவர்கள் வேலைநிறுத்தம்




கொல்கத்தாவில் பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்துக்கு நீதி கேட்டு, இந்தியா முழுவதும் மருத்துவர்கள் இன்று காலை முதல் 24 மணிநேர வேலை நிறுத்தத்தைத் தொடங்கியுள்ளனர்.

அத்தியாவசியமான மருத்துவ சேவைகள் மற்றும் அவசர சிகிச்சைகள் தவிர மற்ற மருத்துவ சிகிச்சைகள் இன்று காலை 6 மணி முதல் ஞாயிறு காலை 6 மணி வரை மேற்கொள்ளப்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நாட்டின் பல பகுதிகளிலும் மருத்துவ சேவைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் போராட்டத்துக்கு அழைப்புவிடுத்த இந்திய மருத்துவக் கழகம் 5 முக்கியக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

உறைவிட மருத்துவர்களின் பணி மற்றும் வாழ்விடச் சூழல்கள் மேம்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக 36 மணி நேர பணி என்பதில் மாற்றம் தேவை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

சுகாதார பணியாளர்கள் மீதான வன்முறைகளைத் தடுக்க நாடு தழுவிய அளவில் ஒரு சட்டம் இயற்ற வேண்டும். 25 மாநிலங்களில், மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகள் மீதான தாக்குதலுக்கு எதிராக சட்டங்கள் உள்ளன. ஆனால், இதுவரை தண்டனைகள் வழங்கப்படவில்லை. இந்தச் சட்டங்கள் களத்தில் பெரும்பாலும் பயனவற்றவையாகவே இருக்கின்றன. அவற்றால் குற்றங்களைத் தடுக்க இயலவில்லை. சுகாதார சேவை பணியாளர்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் (வன்முறை தடுப்பு மற்றும் சொத்துகள் சேதம்) மசோதா 2019 மறுபரிசீலனை செய்ய வேண்டும் உள்ளிட்ட 5 கோரிக்கைகளை முன்வைத்து இன்று மருத்துவர்கள் நாடு தழுவிய போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.




# அமேசான் வனப்பகுதியில் வெடித்து சிதறிய விமானம்

## 5 பேர் உயிரிழப்பு

அமேசான் வனப்பகுதியில் சிறிய ரக விமானம் ஒன்று விழுந்து வெடித்து சிதறிய சம்பவத்தில் ஐந்து பேர் உயிரிழுந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசில் நாட்டின் மடோ கிராஸ்ரோ மாகாணம் அமேசானியன் நகரில் இருந்து ராண்டனொபொலிஸ் நகருக்கு கடந்த 15 திகதி புறப்பட்ட சிறிய ரக விமானமே இவ்வாறு விபத்துள்ளாகியுள்ளது.

மேற்படி விமானம் அமேசன் வனப்பகுதியில் பறந்து கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து தரையில் விழுந்து வெடித்துச் சிதறியுள்ளது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 5 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் அதிகாரிகள் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.












# இஸ்ரேலுக்கு ஆதரவளித்து 7,000 பலஸ்தீனர்களின் விசா விண்ணப்பங்களை நிராகரித்தது அவுஸ்திரேலியா

இஸ்ரேலுக்கு ஆதரவளித்து 7,000 பலஸ்தீனர்களின் விசா விண்ணப்பங்களை அவுஸ்திரேலியா அரசு நிராகரித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் காசாவுக்கும் இடையே நடந்து வரும் போரில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்ட நிலையில் பலர் அகதிகளாக மீள்குடியேற பல நாடுகளுக்கு விசாவுக்கு விண்ணப்பித்து வருகின்றனர்.

அதில் பல பலஸ்தீனர்களும் அவுஸ்திரேலிய விசாவுக்கு விண்ணப்பித்துள்ளனர். ஆனால் அந்த விண்ணப்பங்களை அவுஸ்திரேலியா நிராகரித்து வருவதாக சமீபத்திய அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

இதுவரை 10,033 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் அவுஸ்திரேலிய விசாவுக்கு விண்ணப்பித்துள்ளனர் என உள்துறை அமைச்சர் டோனி பர்கோ தெரிவித்துள்ளார்.

இவற்றில் 2,922 விசாக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதுடன் 7,111 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதுவேளை, இஸ்ரேல் குடிமக்களுக்கான அவுஸ்திரேலிய விசா விண்ணப்பங்கள் அந் நாட்டு அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இதுவரை இஸ்ரேலின் 235 விசா விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு, 8ஆயிரத்து 646 விசா விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பலஸ்தீனியர்களின் நுழைவு அவுஸ்திரேலியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன் தெரிவித்துள்ளார்.

# வியட்நாம் செல்லும் தமது நாட்டு பிரஜைகளுக்கு பிரித்தானிய உள்துறை அலுவலகம் எச்சரிக்கை




வியட்நாம் செல்லும் பிரித்தானியர்களுக்கு பிரித்தானிய உள்துறை அலுவலகம் எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளது.

வியட்நாம் செல்லும் பிரித்தானியர்கள், அங்கு, வணிகம் தொடர்பில் ஏதாவது தகராறு கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டாலோ, வாகன விபத்து முதலான குற்றச்செயல்கள் நிகழ்ந்தாலோ, வியட்நாம் அதிகாரிகள் கடவுச்சீட்டுக்களை பறிமுதல் செய்துவைத்துக்கொள்வார்கள் என்று பிரித்தானிய உள்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், வியட்நாமை விட்டு வெளியேற அந்நாட்டு அதிகாரிகள் தடை விதிப்பார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், வியட்நாமுக்குள், உள்ளூர் அதிகாரிகள் இணையதளங்களை அணுகவும், சமூக ஊடகங்களை பயன்படுத்தவும் தடை செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோக, உங்கள் பானங்களில் சட்டவிரோத போதைப் பொருள்கள் தெரியாமல் கலக்கப்படக்கூடும் என்றும், சில பிரித்தானியர்கள் அந்தவலிமையானபோதைப்பொருள்களால் மன நல பாதிப்புகளுக்குக் கூட ஆளாகியுள்ளார்கள் என்றும் பிரித்தானிய உள்துறை அலுவலகம் எச்சரித்துள்ளது.

யாரேனும் போதைப்பொருள் வைத்திருந்தால், அது மிகக் குறைந்த அளவேயானாலும், வியட்நாமில் அதற்காக உங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம்.

இப்படி ஏதாவது பிரச்சினையில் பிரித்தானியர்கள் சிக்கிக் கொண்டால், வியட்நாமை விட்டு வெளியேற தடை விதிக்கப் பட்டால், ஒரு சட்டத்தரணியின் உதவியை நாடவேண்டும்.

மேலும், அருகிலுள்ள பிரித்தானிய தூதரகத்தையோ, துணை தூதரகத்தையோ தொடர்புகொள்ளவும் என்றும் பிரித்தானிய உள்துறை அலுவலகம் தன் குடிமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அனைத்துலக மனித உரிமை அமைப்பில்

# தமிழர் உரிமைக்கு போராடிய விராஜ் மெண்டிஸ்!

- நவீனன்

தமிழ் மக்களின் விடிவுக்கான செயற்பாடுகளுக்குப் பெரும்பங்காற்றி இயங்கியவரும், அனைத்துலக மனித உரிமைகள் அமைப்பின் தலைமை இயக்குநருமாகிய விராஜ் மெண்டிஸ் நேற்றுக் (16) காலமானார்.

ஜேர்மன் பிரமனிலுள்ள பன்னாட்டு மனித உரிமைகள் அமையம் ஒன்றினைத் தளமாகக் கொண்டு செயற்பட்டு வரும் இவர் தமிழர் விடுதலைப் போராட்டத்தை ஏற்றுக்கொண்டு நீண்டகாலமாக பயணித்தவர்.

**1984இல் இருந்து பயணிப்பவர்**

2009 தமிழின அழிப்பின் பின்பாக தமிழருக்குக் கிடைக்கக் கூடிய தீர்வை நோக்கி மாறுபடாத கருத்துக் கொண்டு செயற்பட்டவர். விராஜ் மெண்டிஸ் 1984 ஆம் ஆண்டில் இருந்தே தமிழர் விடுதலைப் போராட்டத்துடன் உடனிருந்து செயற்பட்டு வந்தவர்.

2009 போருக்குப் பின்னர் பாரிய அநீதி தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதற்கான முதல் அடியை உலகம் எடுத்து வைக்கத் தயாராக இருக்கின்றது என்ற செய்தியை நாம் முன்னெடுக்கும் செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்களுக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் சொல்ல வைத்தவர் விராஜ் மெண்டிஸ்.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழ் மக்கள் சமூகத்துக்கு முற்றிலும் வெளியே இருந்து, இந்த முயற்சி எடுக்கப்படுகிறது என்பதை அவர் வலியுறுத்தினார்.

தமிழர் போராட்டத்தை பன்னாட்டளவில் முடக்கிய வேளையில் அதை எதிர்த்து அரசியல் அடிப்படையிலும் சட்ட அடிப்படையிலும் தொடர்ந்து போராடியவர்களில் விராஜ் மெண்டிஸ் முதன்மையானவராவார்.

சுவிஸ் அரசானது பல தமிழர் அமைப்பு செயற்பாட்டாளர்களை கைது செய்தபோது அதை எதிர்த்து இவர் தீவிரமாகப் போராடினார். தமிழ் அமைப்புகள் குற்றச் செயல்களில் ஈடுபடும் அமைப்பு அல்ல. மாறாகத் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுவதை முதன்மை நோக்காகக் கொண்ட விடுதலை அமைப்பு என்று சுவிசின் உச்ச நீதிமன்றமானது 2018 ஆம் ஆண்டு தீர்ப்பளித்ததற்குப் பின்னால் விராஜ் மெண்டிசின் கடுமையான உழைப்பு இருக்கிறது.

“டேவிட் கமரூனுடன் தேநீர் அருந்துவதைப் பாரிய அடைவாகக் கொள்பவது நகைபபுக்கிடமானது. உங்களால் அவர்களை மாற்ற முடியாது. மாறாக, மேற்குலகின் அதிகார நடுவங்கள் தான் தமிழர்களை ஏமாற்றி, திசைமாற்றி தமிழர் விடுதலைப் போராட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து விலகச் செய்யும்” என்று இடித்துரைப்பதன் மூலம் மேற்குலகின் சூழ்ச்சிக்குத் தமிழர் பலியாகக் கூடாது என்று தமிழர்களிடத்தில் எச்சரிக்கை உணர்வை விராஜ் மெண்டிஸ் ஏற்படுத்தி வந்தார்.

**தமிழ் ஏதிலிகள்**
**ஐரோப்பாவில் விடுதலை**

ஐரோப்பாவில் தமிழ் ஏதிலிகளையும் தமிழர் விடுதலைக்குப் பங்காற்றுபவர்களையும் இலங்கைக்கு நாடுகடத்த அந்தந்த நாடுகளால் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிராகப் போராடி அந்த முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதில் முன்னின்று உழைத்த விராஜ் மெண்டிஸ் மீது புலம்பெயர்ந்த தமிழர்கள் அளவற்ற மதிப்பும் பற்றும் என்றும் வைத்திருக்கின்றனர்.

தமிழர் விடுதலைப் போராட்டத்தையும் அதன் தலைமையையும் கருத்து மாறுபாடின்றி நேசிக்கும் நல்லதொரு சிங்களத் தோழராக, போராடும் தோழனாக எம்முடன் உறுதியாகப் பயணித்த விராஜ் மெண்டிசின் உழைப்பைத் தமிழர் என்றும் மனங்கொள்ள வேண்டும்.

சிங்கள இனத்தவர்கள் மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த ஆர்வலர்களால் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. உரோம் நகரைத் தளமாகக் கொண்டு இயங்கும் நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தைத் தொடர்பு கொள்வதே இந்த விடயத்தில் சிறந்த முன்னெடுப்பாக இருக்கும் என்று முனைவர் அன்டி ஹிகின்பொட்டம் என்பவர் சுட்டிக்காட்டினார்.

வியட்நாமில் முன்னெடுக்கப்பட்ட ‘ரஸல்– சாத்ர’ தீர்ப்பாயத்தின் பாரம்பரியத்தின் வழியில், தொடர்ந்து செயற்படும் இத்தீர்ப்பாயம், உலக அதிகார சக்திகளின் செல்வாக்குக்கு அப்பாற்பட்டது என்றும், அதேநேரம், அறநெறிக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்ளவல்லது என்றும் முனைவர் ஹிகின்பொட்டம் வாதிட்டார்.

**2009 டப்ளின் தீர்ப்பாய அமர்வு**

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு நடைமுறை உறுப்பினராக அயர்லாந்து இருந்ததனாலும், ஆரம்பத்தில் சிறீலங்காவில் சமாதானத்தை அது ஊக்குவித்ததாலும், காலணியத்துக்கு எதிரான வரலாற்றை அது கொண்டிருந்ததன் காரணத்தாலும் அதன் தலைநகரான டப்ளின் நகரத்தில் தீர்ப்பாயத்தின் முதல் அமர்வு 2009இல் நடைபெற்றது.

நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான நம்பகமான சூழலை இலங்கை சமாதானத்துக்கான அயர்லாந்து மன்றமும், பிரேமன் பன்னாட்டு மனித உரிமைகள் அமைப்பும் இணைந்து மேற்கொண்டன. சிறீலங்காவுக்கான மக்கள் தீர்ப்பாயத்தின் முதல் அமர்வுக்கு வேண்டிய நிதியும், வளங்களும் தமிழர் அல்லாத அமைப்புகளிடம் இருந்தே வரவேண்டும் என்பதை விராஜ் வலியுறுத்தினார்.

விராஜ் மெண்டிஸ் தனது வாழ்நாளின் பெரும்பகுதியை தமிழர்க்காகவும், தமிழர் உரிமைக்காகவும், தமிழர் விடுதலைக்காகவும் தன்னை அர்ப்பணித்து பல தசாப்த காலங்களாக பன்முக ஆற்றலோடு அனைத்துத் தளங்களிலும் முன்னின்று பங்காற்றியவர்.

அவரது இழப்பானது தமிழினம் ஈடுசெய்ய முடியாத ஒன்றாக அமைந்துள்ளது. தனது இறுதி மூச்சுவரை தமிழர் உரிமைக்காகவே வாழ்ந்தவர்.

பக்கங்கள் 10

கனடா முரசு

சனிக்கிழமை 17/08/2024

## றொறன்ரோ பகுதியில் வார இறுதியில் மழை

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 17 றொறன்ரோவில் வாரஇறுதியில் 60 மில்லிமீற்றர் வரை மழை எதிர்பார்க்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கனேடிய கல்வி 04




# பிரம்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி; இலங்கை வெளிவிவகார அமைச்சர் கடும் அதிருப்தி!

**கனடாவின் பிரம்டனில் இலங்கைத் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபியை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டமைக்கு இலங்கை கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.**

**இது தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கான கனடாத் தூதுவரை அழைத்து தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.**

**கனடாவின்வாக்குவங்கிஅரசியலுக்காக தொடர்ந்து பரப்பப்படும் இந்தப் பொய்யான கதையை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரிப்பதாக அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**



பிராம்டன் நகரசபையின் தவறான ஆலோசனையின் அடிப்படையிலான செயற்பாடு இலங்கையில் உள்ள அமைதியை விரும்பும் அனைத்து மக்களையும் புண்படுத்துகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற குற்றச்சாட்டானது, தீங்கிழைக்கும் தவறான தகவல்களை அடிப்படையாக கொண்ட புனையப்பட்ட மற்றும் தேசிய, சர்வதேச அளவில் எந்தவொரு பொறுப்பான அதிகாரியாலும் நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டு என அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்தஇரண்டு வருடங்களாக பொருளதார நெருக்கடி நிலவிய போதிலும்,மோதல் முடிவிற்கு வந்த பின்னர் நல்லிணக்கத்தை வளர்ப்பதிலும், நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதிலும் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது எனவும் இலங்கை அமைச்சர் அலிசப்ரி கூறிப்பிட்டார்.

மேலும் கனடா அரசாங்கம் தலையிட்டு குறிப்பிட்ட தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபியை கட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் அமைச்சர் அலிசப்ரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.










# இனப்படுகொலை நினைவுத் தூபிக்கு அடிக்கல் நடுகின்ற நிகழ்வை எதிர்த்துச் சீர்குலைத்தமை மோசமான செயல்!

## சீறுகின்றது கனடியத் தமிழர் பேரவை

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 17

பிராம்ப்டனில் தமிழ் இனப்படுகொலை நினைவுத் தூபி விழாவை எதிர்ப்பாளர்கள் சீர்குலைத்தமையை கனடியத் தமிழர் பேரவை கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கனடியத் தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் -

'இலங்கைக் கொடியை ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் குழு ஒன்று பிரம்டனில் நடைபெற்ற தமிழ் இனப்படுகொலை நினைவுத் தூபி அடிக்கல் நாட்டு விழாவை சீர்குலைத்தது குறித்து கனடியத் தமிழர் பேரவை (CTC) ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறது.

இந்த எதிர்ப்பின் ஆக்ரோஷமான தொனி மற்றும் அச்சுறுத்தும் தன்மையால் நாங்கள் பீதியடைந்துள்ளோம். தமிழ் இனப்படுகொலையை ஒப்புக்கொள்வது நல்லிணக்கத்திற்கான ஒரு முக்கியமான படி என்பதை இந்த எதிர்ப்பாளர்கள் அங்கீகரிக்கத் தவறியது ஏமாற்றமளிக்கிறது.

இந்தப் போராட்டத்தின் போது வெளிப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் சுதந்திரமான கருத்துரிமை நசுக்கப்படுவதில் இருந்து தப்பிக்கவே இலங்கையிலிருந்து தமிழர்கள் வெளியேறி இப்போது கனடாவை தாயகம் என்று அழைக்கின்ற நிலை உருவாகியுள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டியது அவசியம்.

பிராம்ப்டனில் ஒரு நினைவுச் சின்னம் அமைப்பதற்கான முன்மொழிவு பிராம்ப்டன் சிட்டி கவுன்சில் மற்றும் மேயர் பேட்ரிக் பிரவுண் ஆகியோரால் ஆதரிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இம்முயற்சியானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இனப்படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இதேபோன்ற நினைவுச்சின்னம் அழிக்கப்பட்டதற்கு நேரடியான பிரதிபலிப்பாகும்.

தமிழ் இனப்படுகொலையின் யதார்த்தத்தை மறுப்பதை இலங்கை நிறுத்த வேண்டும். இலங்கையிலும் சரி, வெளிநாடுகளிலும் சரி, தமிழர்கள் இழந்த தங்கள் அன்புக்குரியவர்களின் வாழ்க்கையை நினைவு கூரும் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.

மேலும், தமிழ் இனப்படுகொலையில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து நினைவுச் சின்னம் ஒன்றை அமைக்கும் கனடியர்களின் உரிமையில் தலையிட இலங்கைக்கு உரிமை இல்லை என்பதை கனடிய தமிழர் பேரவை உறுதியாக வலியுறுத்துகின்றது.

கடந்த காலத்தை இனப்படுகொலை என்று ஒப்புக்கொள்வது முன்னோக்கி நகர்த்துவதற்கு அவசியமான ஒரு படியாகும். பிராம்ப்டனில் தமிழ் இனப்படுகொலை நினைவிடம் அமைப்பதற்கு கனடியத் தமிழர் பேரவை தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. இறந்தவர்களை நினைவு கூர்வதற்கும், அஞ்சலி செலுத்துவதற்குமான தமிழ் சமூகத்தின் உரிமை மறுக்கப்பட முடியாது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டு உறுதி, நீடித்த வலிமையின் சக்திமிக்க சின்னம் பிராம்ப்டனில்!

## அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு



ஒன்ராரியோ, ஓகஸ்ட் 17

கூட்டு உறுதி மற்றும் நீடித்த வலிமையின் சக்திவாய்ந்த சின்னமான பிராம்ப்டனில் உள்ள தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னத்தின் கட்டுமானப் பணிகள் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும், பழங்குடிகள் உறவுகள் அமைச்சருமான கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமது சமூக ஊடகத்தில் கரி ஆனந்தசங்கரி பதிவிட்டுள்ளார்.

மே 18ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக அங்கீகரித்த முதலாவது தேசிய நாடாளுமன்றம் என்ற வரலாற்றை கனடா படைத்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நினைவுச்சின்னம், நிகழ்வுகள் ஒருபோதும் மறக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கான அர்ப்பணிப்பின் நீடித்த அடையாளமாக நிற்கும் என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இதனைச் செய்வதில் தலைமைத்துவம் அளிக்கும் மேயர் பிரட்ரிக் பிறவுனுக்கும், சம்பந்தப்பட்ட ஏனைய அனைவருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி நன்றி தெரிவித்துள்ளார்.








# புலிகள் இயக்கம் மீதான தடையை நீடிக்கும் கனடாவின் முடிவுக்கு இலங்கை வரவேற்பு!



கனேடிய அரசாங்கத்தினால் அண்மையில் புதுப்பிக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட அமைப்புக்கள் அடங்கிய பட்டியலில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீளவும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. கனடாவின் முடிவை இலங்கை அரசு வரவேற்றுள்ளது.

கனேடிய அரசாங்கம் கடந்த 2006 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் உள்ளடக்கியது. அப்பட்டியல் 5 வருடங்களுக்கு ஒருமுறை மீளாய்வுக்கு உட்படுத்தப்படும்.

அதற்கமைய இவ்வருடம் ஜுன் மாதம் 7 ஆம் திகதி அப்பட்டியல் மீளப்புதுப்பிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறு புதுப்பிக்கப்பட்ட பட்டியலிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயர் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் கனடாவின் தடைக்கு வரவேற்பு தெரிவித்து இலங்கை வெளிவிவகார அமைச்சினால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் -

'கனடாவைத் தளமாகக்கொண்டு இயங்கிய உலகத்தமிழ் அமைப்புடன் இணைந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் தொடர்ந்து உள்ளடக்குவதற்கு கனேடிய அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானத்தை வரவேற்கிறோம்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கனேடிய அரசாங்கத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புதுப்பித்தல் மீளாய்வின் பிரகாரம், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் எச்சங்கள் சர்வதேச ரீதியில் நிதி திரட்டலிலும், இயங்குகையிலும் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

'உலகத்தமிழ் அமைப்பு தொடர்பில் கனேடிய அரசாங்கத்தினால் அளிக்கப்பட்டிருக்கும் விளக்கத்தில், அவ்வமைப்பானது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சார்பில் நிதி திரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் ஊடாக புலிகள் இயக்கத்தின் பயங்கரவாத செயற்பாடுகளுக்குக் களம் அமைத்துக்கொடுத்திருக்கிறது.

எனவே, இவ்வமைப்புக்களால் தொடர்ந்து அச்சுறுத்தல் நிலவுவதன் காரணமாகவே அவற்றைத் 'தடைப் பட்டியலில்' பேணுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது' எனவும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நகைச்சுவையாக முதல்வர் டக் போர்ட் கூறிய கருத்தினால் ஏற்பட்ட சர்ச்சை!



கனடாவில் ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் அண்மையில் கூறிய நகைச்சுவைக் கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மிருக வைத்திய சாலையில் நோயாளர்கள் சிகிச்சை பெறுவது தொடர்பில் அவர் நகைச்சுவை ஒன்றை கூறி இருந்தார்.

அண்மையில் குயின்ஸ் பாக்கில் பாரிய மிருக வைத்தியசாலை ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலை தொடர்பில் அவர் கருத்து வெளியிட்டிருந்தார். கனடாவில் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதில் நிலவிவரும் நெருக்கடி நிலைமையை விமர்சனம் செய்யும் வகையில் அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

மிருக வைத்திய சாலையில் நோயாளர்கள் எம்.ஆர்.ஐ. மற்றும் சிடி ஸ்கான்களைச் செய்ய நேரிடும். எனவே அதற்காக மிருக வைத்திய சாலையில் நோயாளர்களுக்கு ஓர் அறையை ஒதுக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த கருத்து தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. முதல்வர் டக் போர்ட்டின் இந்தக் கருத்து இழிவானது எனவும், இதற்காக அவர் மன்னிப்பு கோர வேண்டும் எனவும் ஒன்றாறியோ மாகாண எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன. நீண்ட காலமாக திட்டமிட்ட அடிப் படையில் சுகாதார நலனுக்கு நிதியை ஒதுக்காத அரசாங்கம் தற்பொழுது நகைச்சுவை செய்து வருவது கண் டிக்கத்தக்கது என எதிர்கட்சிகள் தெரிவித்துள்ளன.

## ரொறன்ரோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காட்சி அல்லது பிற வெளிப்புற நிகழ்வுகளுக்குச் செல்வதாயின் அவதானமாகச் செல்லுமாறு கோரப்பட்டுள்ளனர்.

டொராண்டோ மற்றும் தெற்கு ஒன்டாரியோவின் பெரும்பகுதிக்கு ஒரு சிறப்பு வானிலை அறிக்கையை சுற்றுச்சூழல் கனடா வெளியிட்டுள்ளது.

இந்த எச்சரிக்காயனது வார இறுதியில் 'குறிப்பிடத்தக்க மழைப்பொழிவை' அறிவுறுத்தியுள்ளது.

வெள்ளிக்கிழமை மாலை தொடங்கி ஞாயிற்றுக்கிழமை வரை மழை தொடரும் எனவும் சனிக்கிழமையன்று அதிக மழை எதிர்பார்க்கப்படுவதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.






# மூன்றாவது விமான சேவை நிறுவனம் நிதி நெருக்கடி காரணமாக மூடுவிழா

கனடாவின் ஜெட் லைன்ஸ் விமான சேவை நிறுவனம் தனது சேவையை நிறுத்திக் கொள்வதாக அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளின் பின்னர் இவ்வாறு சேவை நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிதி நெருக்கடி காரணமாக இவ்வாறு சேவையை நிறுத்துவதாக அது அறிவித்துள்ளது.

கனடாவின் மூன்று விமான சேவை நிறுவனங்கள் ஓராண்டு காலப்பகுதிக்குள் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலிவான விமான சேவையை வழங்கும் விமான சேவை நிறுவனங்களின் ஒன்றான ஜெட்லைன்ஸ் நிறுவனம் இவ்வாறு சேவையை நிறுத்திக் கொண்டுள்ளது.

உள்ளூர் பயணங்களுக்காக இந்த விமான சேவை நிறுவனம் விமானங்களை ஈடுபடுத்தி வந்தது.

இந்த விமான சேவை நிறுவனத்தின் ஊடாக பயண ஏற்பாடுகளை செய்த பயணிகள் செலுத்திய கட்டணத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடன் அட்டை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு செலுத்திய கட்டணத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ரொறன்ரோவில் இளம் தலைமுறையினர் பெரும் மன அழுத்தம், உளப் பாதிப்பில்!

ரொறன்ரோவில் இளம் தலைமுறையினர் அழுத்தங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னைய தலைமுறையினரை விடவும் தற்போதைய இளைய தலைமுறையினர் பெரும் மன உளைச்சலையும் நிதி ரீதியான பிரச்சினைகளையும் எதிர் நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் அண்மையில் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. Toronto Foundation charity என்ற அறக்கட்டளை அமைப்பு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக வயது, இருபதுகளைக் கொண்ட இளம் தலைமுறையினர் தனிமையை உணர்கின்றனர் எனவும், உணவுப் பாதுகாப்பின்மையினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் உள ரீதியான பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒப்பீட்டளவில் ஏனைய வயதுகளை உடையவர்கள் எதிர்நோக்கும் அழுத்தங்களை விட இந்த இளம் தலைமுறையினர் கூடுதல் அழுத்தங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



குறிப்பாக இந்த இளம் தலைமுறை அதிக அளவு நிதி நெருக்கடியை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாம்.

ரொறன்ரோவை சேர்ந்த 18 முதல் 29 வயது வரையிலானவர்களில் 45 வீதமானவர்களது உளச்சுகாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டு வாடகை, அடகுக் கடன் போன்ற பல்வேறு பிரச்சனைகளினால் வாரத்தில் மூன்று நாள்கள் வரையில் தனிமையை அல்லது மன உளைச்சலை இவர்கள் எதிர்நோக்குகின்றனர் எனக் கூறப்படுகிறது.

கோவிட் பெருந்தொற்று காரணமாக 18 முதல் 30 வயது வரையிலான ரொறன்ரோ பிரஜைகள் கூடுதல் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.




# சிறுவர் நலன்புரித் திட்டத்திற்கு இனிமேல் ஒன்றாரியோவில் கூடுதலாக நிதி ஒதுக்கீடு

ஒன்றாரியோவில் சிறுவர் நலன் புரி திட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

மாகாணத்தில் சிறுவர் நலன்புரித் திட்டத்திற்காக மத்திய அரசாங்கம் 10 டொலர்களை நாளொன்றுக்கு வழங்குகின்றது.

எனினும் இந்த நிதி ஒதுக்கீடு போதுமானதல்ல என குற்றம் சுமத்தப்பட்டு வந்தது.

குறிப்பாக சிறுவர் நலன் குறித்த திட்டத்தை முன்னெடுப்பதற்கு கூடுதல் அளவில் செலவு ஏற்படுவதாக சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் தெரிவித்து வருகின்றன.

இவ்வாறான ஒரு பின்னணியில் சிறுவர் நலன்புரிய திட்டங்களுக்கான கொடுப்பினவு தொகையை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சிறுவர் நலன்புரி திட்டம் தொடர்பிலான புதிய சூத்திரம் ஒன்று அறிமுகம் செய்யப்படும் என கல்வி அமைச்சர் கட்ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை நீண்ட காலத்திற்கு நடத்திச் செல்ல சந்தர்ப்பம் ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் புதிய முறையின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பணியாளர்களுக்கான சம்பளங்களை வழங்கவும் ஏனைய செலவுகளை செய்யக்கூடிய வகையிலும் புதிய நிதி ஒதுக்கீட்டுத் திட்டம் அமையப்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது வழங்கப்படும் 10 டொலர்களுக்கு பதிலாக சுமார் 22 டொலர்கள் வரையில் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# மெக்கிரேரி சமூகத்தின் 4 மரணங்கள் தேசியப் பொலிஸ் பிரிவு விசாரணை!

மனிடோபா, ஓகஸ்ட் 17

வின்னிபெக்கின் வடமேற்கே உள்ள மெக்கிரேரி சமூகத்தில் இடம்பெற்ற நான்கு மரணங்கள் தொடர்பில் தேசியப் பொலிஸ் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் கிடைத்த ஒரு தகவலின் பேரில் 41 வயதுடைய ஒருவரின் உடலை வீதியில் பொலிஸார் கண்டுபிடித்தனர். அந்த நபர் சுயமாக ஏற்படுத்திக் கொண்ட காயங்களால் உயிரிழந்ததாக கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவர்கள் அருகிலுள்ள வீட்டிற்குச் சென்று 66 வயது பெண் மற்றும் 65 மற்றும் 35 வயதுடைய இரண்டு ஆண்களின் சடலங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த மரணங்கள் கொலையா எனத் தற்போது விசாரிக்கப்பட்டு வருகிறது.

# கல்வி கற்க கனடாவுக்கு வந்த இந்திய மாணவரை மோசமான வார்த்தைகளால் விமர்சித்த கனேடியர்

கனடாவுக்கு கல்வி கற்கச் சென்ற இந்திய மாணவர் ஒருவர் எதிர்பாராத விதமாக இன ரீதியான தாக்குதலுக்குள்ளானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று இந்திய மாணவரான தரன்பிரீத் சிங் (21), தனது உறவினர் மற்றும் நண்பர் ஒருவருடன் கனடாவின் Newfoundland and Labrador மாகாணத்திலுள்ள Sunshine Rotary Park என்னும் பூங்காவிற்குச் சென்றுள்ளார்.

அப்போது, வெள்ளையர் ஒரு பெரிய நாயுடன் அங்கு வந்துள்ளார். இந்த மாணவரையும் அவருடன் இருந்தவர்களையும் பாகிஸ்தானியர் என எண்ணிக்கொண்ட அந்த நபர், உங்களைப் பார்த்தாலே வெறுப்பாக இருக்கிறது, என் நாடு முழுவதையும் ஆக்கிரமித்துக்கொண்டீர்கள் என்று சத்தமிட்டிருக்கிறார்.

ஈரான், ஆப்கானிஸ்தான் அல்லது பாகிஸ்தானில் என் போல வெள்ளையர்களைப் பார்க்கமுடியுமா என அவர் கேட்க, நாங்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்று கூறியிருக்கிறார் சிங்.

உடனே அந்த நபர், நீங்களெல்லாம் ஒரே ஆள்கள்தான், நீங்கள் கனேடியர்கள் இல்லையே என்று கூறி மோசமான வார்த்தைகளால் திட்டியிருக்கிறார்.

நீங்களெல்லாம் கனடா அரசின் பணத்தை செலவு செய்கிறீர்கள் என்று அவர் கூற, உடனே சிங், இல்லை, நாங்கள் கல்வி கற்பதற்காக 40,000 டொலர்களுக்கும் அதிகமாக கட்டணம் செலுத்தித்தான் கனடா வந்திருக்கிறோம் என்று விளக்கியிருக்கிறார்.

அந்த நபர் தொடர்ந்து சத்தமிட்டுக்கொண்டே இருக்க, சிங் நடப்பதை வீடியோ எடுப்பதைக் கவனித்த அந்த நபரின் நண்பர் அவரை அங்கிருந்து இழுத்துக் கொண்டு சென்றிருக்கிறார்.

இந்த சம்பவம் ஏற்படுத்திய நடுக்கத்தால், அன்று இரவு எங்களால் சாப்பிட முடியவில்லை என்கிறார் சிங்.

இந்த விடயம் குறித்து தன் குடும்பத்தினரிடம் கூட தெரிவிக்கவில்லை சிங். என்றாலும், தன்னைப்போல கனடாவுக்கு வரும் இந்தியர்களை எச்சரிக்கும் வகையில், தான் வீடியோ எடுத்த காட்சிகளை சில சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளார் அவர்.

“கனடாவில் இரண்டு ஆண்டுகளாக தங்கியிருக்கிறேன். என் வீட்டை நான் இதுவரை மிஸ் பண்ணியதில்லை, அந்த சம்பவம் நடந்த அன்று என் வீட்டை ரொம்பவே மிஸ் பண்ணினேன்” - என்கிறார்










# பாதிப்புற்ற ஜாஸ்பர் நகருக்குள் வெளியார் பிரவேசிக்கத் தடை!

காட்டுத்தீ காரணமாக பேரழிவினை சந்தித்த ஜாஸ்பர் நகருக்கு அந்த நகரை சாராதவர்கள் பிரவேசிக்க கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தைச் சேர்ந்த மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி அந்த நகரை சேர்ந்தவர்கள் மட்டும் நகருக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் முதல் நகருக்குற் பிரவேசிக்க முடியும் என அந்தப் பகுதியில் வாழ்ந்து வந்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நகர மக்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜாஸ்பர் நகரத்தை சேர்ந்த மக்கள் தங்களது வதிவிட ஆதாரங்களை காண்பித்து நகருக்குள் பிரவேசிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரின் கிழக்கு நுழைவாயிலின் ஊடாக மட்டும் நகருக்குள் பிரவேசிக்க முடியும்எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் தடவையாக நேற்றைய தினத்தில் ஜாஸ்பர் நகரைச் சேர்ந்த மக்கள் மீண்டும் தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பத் தொடங்கினர்.

அந்த வேளை ஓர் உணர்வுபூர்வமான தருணம் என தெரிவிக்கப்பட்டது.

எனினும், ஜாஸ்பரை சேர்ந்த ஒருவருக்கு உதவி பெற்றுக் கொள்வதற்காக வெளிநபர் ஒருவரை அந்த பகுதிக்கு அழைத்துச் செல்வதற்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படா என நகர நிர்வாகம் அறிவித்துள்ளது.







# பொலிஸ் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் தென் சிம்கோ பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 19 வயதான இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றும் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து பொலிஸ் விசேட விசாரணை பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குடும்ப பிரச்சினை தொடர்பான சம்பவமொன்று குறித்து விசாரணை நடத்த பொலிஸார் சென்றிருந்த போது இந்தத் துப்பாக்கி சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெய்ரே பகுதியைச் சேர்ந்த வைத்தியசாலை ஒன்றில் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காக இருவரும் அனுமதிக்கப்பட்ட போதும் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# ஒன்ராரியோ கல்வி அமைச்சர் டொட் ஸ்மித் பதவி விலகல்!

ஒன்ராரியோ, ஒகஸ்ட் 17

ஒன்ராரியோ மாகாண கல்வி அமைச்சர் டொட் ஸ்மித் பதவி விலகியுள்ளார்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தாம் பதவி விலகுகிறார் என அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் துறையில் ஒரு பதவியை ஏற்றுக் கொள்வதற்காக அரசியலை விட்டு வெளியேறுகிறார் என டொட் ஸ்மித் நேற்று வெளியான ஓர் அறிக்கையில் தெரி வித்தார்.

பே ஒப் கின்ட் மாகாண சபை உறுப்பினர் டொட் ஸ்மித், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தனது அமைச்சு பதவியில் இருந்தும், மாகாண சபை உறுப்பினர் பதவியில் இருந்தும் விலகுகிறார்.

தனது முடிவை முதல்வர் டக் ஃபோர்ட்டிடம் அறிவித்துள்ளார் என டொட் ஸ்மித் தெரிவித்தார்

ஒன்ராரியோ மாகாண எரிசக்தி அமைச்சராக டொட் ஸ்மித் மூன்று ஆண்டுகள் பணியாற்றினார்.

ஜூன் மாத அமைச்சரவை மாற்றத்தை தொடர்ந்து அவருக்கு கல்வி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

இவர் 2011ஆம் ஆண்டு முதல் மாகாண சபை உறுப்பினராக பதவி வகிக்கிறார்.

இவரது பதவி விலகலைத் தொடர்ந்து ஜில் டன்லொப் ஒன்ராரியோவின் புதிய கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.








# பொதுக் குளங்களை மாசு படுத்திய பெண்!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 17

இந்த மாத தொடக்கத்தில் மில்டனில் உள்ள பொதுக் குளங்களை மலம் மற்றும் சாக்லேட் பார்களால் மாசுபடுத்தியதாக ஒரு பெண் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மில்டன் ஸ்போர்ட்ஸ் சென்டர் மற்றும் மில்டன் லெஷர் சென்டரில் உள்ள இரண்டு குளங்களில் 'நடந்து வரும் சேவை இடையூறுகள்' பற்றி நகர அதிகாரிகள் செவ்வாயன்று எச்சரித்தனர் என்றய் ஹோல்டன் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓகஸ்ட் 1 முதல் 12 வரை பல முறை, பொதுமக்கள் நீராடும்போது குளங்களில் ஒருவர் மலம் மற்றும் சாக்லேட் பார்களை வைத்ததாக அதிகாரிகள் பின்னர் அறிந்தனர்.

'இந்த நடவடிக்கைகள் அங்கிருந்தவர்களின் ஆரோக்கியத்திற்கு ஆபத்தை விளைவித்தன. மேலும் இந்த வசதிகள் நீண்ட காலத்திற்கு மூடப்பட்டன. இது நீர்வாழ் நிரலாக்கத்தை பாதிக்கிறது மற்றும் மில்டன் நகரத்திற்கு கணிசமான செலவுகளை ஏற்படுத்தியது' என்று நேற்று வெளியிட்ட அறிக்கையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓகஸ்ட் 15ஆம் திகதி மில்டன் ஓய்வு மையத்தில் உள்ள குளத்தை ஒரு நபர் வேண்டுமென்றே மாசுபடுத்துவதை அதிகாரிகள் பார்த்தனர் எனவும், இதனையடுத்து அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.




# பழங்குடிச் சிறுவர்களின் புதைகுழிகளை தேடும் நடவடிக்கைக்கு நிதி வெட்டும் திட்டம் வாபஸ்!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 17

முன்னாள் வதிவிடப் பாடசாலை மைதானங்களைத் தேடுவதற்கான நிதியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் மத்திய அரசு பின்வாங்கியுள்ளது.

பழங்குடியினத் தலைவர்கள் மற்றும் சமூகங்களின் கவலைகளை அரசாங்கம் 'சத்தமாகவும் தெளிவாகவும்' கேட்டுள்ளதாக பழங்குடிகள் உறவுகள் அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

வதிவிடப் பாடசாலைகள் விடுபட்ட குழந்தைகள் சமூக ஆதரவு நிதியத்தின் மூலம் சமூகங்கள் முன்பு ஆண்டுக்கு 3 மில்லியன் டொலர்கள் வரை பெறலாம், ஆனால் அந்த தொகையை அரசாங்கம் 500,000 டொலர்கள் என்ற வரம்புக்கு நகர்த்தியது.

அரசாங்கம் இப்போது அந்த கட்டுப்பாட்டை விலக்கி, நிதியுதவி மீதான திட்டமிட்ட கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளது.

இது முன்னாள் வதிவிடப் பாடசாலைகளில் புதைக்கப்பட்ட இடங்களைக் கண்டறிவதற்கும், திரும்பி வராத குழந்தைகளை அடையாளம் காண்பதற்கும் பயன்படும் என்று அமைச்சர் ஆனந்தசங்கரி கூறியுள்ளார்.




# கனடாவிலிருந்து வெளியேற்ற உத்தரவிடப்படுவோரை இனி கண்காணிக்க முகத்தை அடையாளம் காணும் தொழில்நுட்பம்

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 17

நாட்டிலிருந்து வெளியேற்ற உத்தரவிடப்பட்ட நபர்களைக் கண்காணிக்க, முகத்தை அடையாளம் காணும் தொழில்நுட்பத்தை அவர்கள் தொடர்பில் பயன்படுத்தும் செயலியை செயல்படுத்துவதற்கு கனடா எல்லைச் சேவைகள் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

ஒரு நபரின் அடையாளத்தை உறுதிப்படுத்தவும், அவர்கள் பயன்பாட்டைப் பாவிக்கும் போது அவரது இருப்பிடத் தரவைப் பதிவுசெய்யவும் பயோமெட்ரிக்ஸை உபயோகிக்கும் முறைமை இது.

அணுகல் - தகவல் மூலம் பெறப்பட்ட ஆவணங்கள், 2021 ஆம் ஆண்டிலேயே கனடா எல்லை சேவைகள் நிறுவனம் அத்தகைய பயன்பாட்டை முன்மொழிந்துள்ளது என்பதைக் குறிக்கிறது.

இந்த இலையுதிர்காலத்தில் ReportIn என்ற செயலி தொடங்கப்படும் என்று ஒரு செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தினார்.

இந்த செயலியை நிரந்தர குடியிருப்பாளர்கள் மற்றும் அனுமதிக்க முடியாத விசாரணைகளுக்கு உட்பட்ட வெளிநாட்டினருக்கும் பயன்படுத்தலாம் என்று கனடா எல்லை சேவைகள் நிறுவனம் கூறியுள்ளது.

# போதைப்பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்த 32 பேர் ரொறன்ரோவில் அதிரடியாகக் கைது!

கனடாவின் ரொறன்ரோவில் அதிரடியாக 32 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்களுக்கு எதிராக 158 குற்றவியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக விசாரணை நடத்தப்பட்டு இந்த குற்றவாளி கும்பல் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த குற்றவாளி கும்பல் கனடிய தபால் திணைக்களத்தைப் பயன்படுத்தி போதைப் பொருள்களை ஏனைய மாகாணங்களுக்கு விநியோகம் செய்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்த குற்றவாளிக் கும்பல்கள் தொடர்பில் சுமார் 11 மாதங்களாக கண்காணிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோ பகுதி மட்டுமின்றி இந்த நபர்கள் நாட்டின் பல்வேறு இடங்களிலும் குற்ற செயல்களில்



ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்களை கைது செய்வதற்காக 35 பிடிவிறாந்து உத்தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டு தேடுதல் வேட்டைகள் நடத்தப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது 9 ஆயுதங்கள் மீட்கப்பட்டமையுடன், சுமார் ஐந்து கிலோகிராம் எடையினுடைய கொக்கெய்ன் போதை பொருளும், 6 கிலோகிராம் எடையுடைய மெத்தப்பட்டமைன் போதை பொருளும், மூன்று லட்சத்து 20 ஆயிரம் டொலர் பெறுமதியான பணமும் மீட்கப்பட்டன.